

# மழையும் நினைவும்

மருதூர். ஏ. மஜீத் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழையும்சிறையும்
மழையும்சிறையும்
மழையும்சிறையும்
மழையும்சிறையும்
மழையும்சிறையும்
மழையும்சிறையும்
மழையும்சிறையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமும்

சிறையும்

மருதூர் ஏ. ஹஸன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதூர். ஏ. ஹஸனின்
''மழையும் சிறையும்''
புதுக்கவிதைத்தொகுதி

வெளியீடு : மருதூர்ப்பணிமனை

முதல் பதிப்பு : 1993

உரிமை : மருதூர். ஏ. ஹஸன்

விலை : 50/=

அட்டை ஓவியம் : ருத்ரா

அச்சுவேலை : நெஷனல் அச்சகம்,
சாய்ந்தமருது.

Maruthoor. A. Hasan
''Maliyum Siraiyum''
Puthuk Kavithaith Thohuthy

Published by : Maruthoor Panimanai

First Edition : 1993

(C) : Maruthoor A. Hasan

Price : Rs. 50/=

Cover : Ruthra

Printers : National Printers,
Sainthamaruthu.

*408, மாவடி வீதி, சாய்ந்தமருது - 01, கல்முனை, இலங்கை.*
408, Mavady Road, Sainthamaruthu - 01, Kalmunai, S. L.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பனிமலையின் வேறுசில..............**

O மருதூர். ஏ. ஹஸனின்

*"அநாமிகா" புதுக்கவிதை*

O மருதூர். ஏ. மஜீதின்

*"இஸ்லாத்தைப்பற்றி இதரமதத்தவர்கள்"*

O மருதூர். ஏ. மஜீதின்

*"பன்னீர் கூதலும்*

*சந்தனப் போர்வையும்"*

O பக்கீர் ஜஃபரின்

*"வெற்றிகரமான கற்பித்தலுக்கான*

*சில ஆலோசனைகள்"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய யதார்த்த முகங்களும் மருதூர் ஏ. ஹஸனின் கவிதைகளும்

- மேமன்கவி -

தமிழில் அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக, தமிழ்க்கவிதை அடைந்திருக்கும் பரிமாணமானது, கடந்த நூற்றாண்டுகளில் தமிழ்க்கவிதைக்குள் அனுமதிக்கப்படாத பாடுபொருளை அனுமதிக்கப்பட்டதோடு, கவிஞர்கள் என அங்கீகரிக்கப்பட்டவர்கள் என குறித்த வட்டத்தினரை கடந்து, புதிய தரத்தினரும் கவிஞர்களாக அடையாளம் காணப்பட்டார்கள். இதற்கு காரணம் புதுக்கவிதையின் வருகை என சொல்லப்பட்டது. ஆனால், கூர்ந்து, கவனித்தோமானால் வெகுசன கலாசாரத்தை பரப்புகின்ற வெகுசன தொடர்புச் சாதனங்களினூடாக, 'கவிதை' பரவலான வாசகர் வட்டத்தை அடைந்ததே ஓர் அடிப்படை காரணமாக கொள்ளலாம்.

பரவலான வாசகர் வட்டத்தை கவிதை சென்று அடைவதற்கு காரணமாக இருந்தவர்களில், தமிழகத்தில் தோன்றிய 'வானம் பாடி' குழுவினரின் பங்கு குறிப்பிடத் தக்கது. அதிலும், குறிப்பாக, அக்குழு வழியாக தோன்றிய மேத்தா, கவிக்கோ அப்துல் ரஹ்மான், மீரா, வைரமுத்து போன்ற கவிஞர்கள், 'வானம் பாடி' குழுவின் பிளவுக்கு பின் பெரும் வியாபார பத்திரிகைகளிலும், பரவலான புத்தக வெளியீடுகளின் மூலமும் வெளியிட்ட கவிதைகளின் தாக்கத்திற்கு உட்பட்ட, இளைய தலைமுறையைச் சார்ந்த பலர் கவிதை படைப்பாக்கத்தில் ஈடுபட்டார்கள்.

(அவர்களின் கவிதை ஆக்கங்களில் 'வானம் பாடி' குழுவினர் பழக்கி விட்ட காதல் கவிதைகளின் வார்ப்புகளையும் சமூக அரசியல் விமர்சனங்களை முன் உரைக்கும் கவிதைகளின் சாயலையும் காணமுடிந்தது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மேற்குறித்த பண்புகள் தமிழகத்தில் தோன்றிய கவிதை படைப்பாளிகளிடம் ஒட்டுமொத்தமாகவும் பரவலாகவும் காணப்பட்டது.)

ஆனால், இலங்கையில் 80க்கு பின் தோன்றிய இளைய தலைமுறை கவிதைப் படைப்பாளிகளிடம், 'வானம் பாடி' குழுவினர் பழக்கி விட்ட காதல் கவிதைகளின் தாக்கம் அதிக அளவில் காணபட - சமூக - அரசியல் விமர்சன கவிதைகளைப் பொறுத்தவரை - தமிழக புதிய தலைமுறைப் படைப்பாளிகளிடம் காணப்படாத ஒரு புதிய - வித்தியாச மான பண்பு வெளிப்பட்டது.

இதற்கு பின்வரும் அம்சங்கள் காரணங்களாக அமைந்தன எனலாம்.

(1) இலங்கையில் 80க்குபின் தோன்றிய புதியதலைமுறை படைப்பாற் பெரும்பாலானோர் வட, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தமை.

(2) இலங்கையில் சமூக - அரசியல் ரீதியாக சிறுபான்மை மக்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள்.

(3) சமூக - அரசியல் ரீதியாக இலங்கை வாழும் பல்லின மக்களிடையே தோன்றிய முரண்பாடுகள்.

(4) எனவே, 80க்குபின் தேசிய இனங்களின் போராட்டத்தின் காரணமாக - எழுதிய தேர்ந்த கவிஞர்களின் கவிதை களின் தாக்கத்திற்கு உட்பட்டமை.

போன்ற காரணங்களுடன் இலங்கையில் மேலும் சில பண்புகளும் வெகுசன கலாசார வெளிப்பாட்டினூடாக தென்பட்டன.

அதாவது, தமிழகத்தைப் போன்று, பெரும் வியாபார பத்திரிகைகள் இங்கு வெளிவராததும் தமிழ் தேசிய பத்திரிகைகள் ஆரோக்கியமான கலை, இலக்கிய வளர்ச் சியில் அக்கறை செலுத்தியமையும் முக்கியமான வித்தியா சமான பண்புகளாக இனங் காணப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் – தேசிய பத்திரிகையான தினகரன் அன்று தொட்டு. இன்றுவரை ஈடுபாடு கொண்டிருந்த ஆரோக்கியமான கலை, இலக்கிய வளர்ச்சியில் செலுத்திய கவனத்தின் காரணமாக, பல்வேறு வழிகளில் தனது பங்கினை ஆற்றியது – ஆற்றி வருகின்றது. அதிலும், குறிப்பாக, நவீன தமிழ்க் கவிதையைப் பொறுத்தவரை வீ. ஜெகதீஸனால் தொகுத்து வழங்கப் பெறும் 'கவிதாசாகரம்' எனும் பகுதியின் மூலம், இலங்கையின் நவீன தமிழ்க் கவிதை வளர்ச்சியில் தினகரன் தனது பங்கினைச் செலுத்தி வருகிறது.

'கவிதாசாகரம்' கவிதைப் பகுதியில் இடம் பெறும் கவிதைகளை ஒரு தொகுப்பாக படிப்போர் அக்கவிதைகள் காதல் முதல் இன்றைய தேசிய சர்வதேசீய பிரச்சினைகள் வரையிலான பல் வித அம்சங்களை - கவிதையாக்கங்களாக - அதுவும் குறிப்பாக, புதிய புதிய கவிதைப் படைப்பாளிகளின் படைப்புகளினூடாக வெளிக்கொணருகிறது என்பதை கண்டு கொள்வர். அதே போன்று இலங்கையில் கவிதைக்கென முதல் - முதலாக தோன்றிய இயக்கமான வலம்புரி கவிதா வட்டம் (வகவம்) தாம் நடாத்திய கவியரங்குகளில் வாசிக்கப்பட்ட / வாசிக்கப்படும் கவிதைகளிலும் அத்தன்மையினை காணலாம்.

மேற்குறித்த கருத்துக்களின் பின்னணியில் தான் மருதூர் ஏ. ஹசனின் தோற்றத்தையும் அவர் தம் கவிதைகளையும் நாம் நோக்க வேண்டும். ஏனெனில், மருதூர். ஏ. ஹசன் 80க்கு பின் தனது பரவலான அடையாளத்தை கவிதை உலகில் காட்டி வருபவர். தொடர்ந்து 'கவிதாசாகரம்' பகுதியில் கவிதைகள் எழுதி வருபவர் ஆரம்ப காலம் தொட்டு 'வகவம்' கவியரங்குகளில் கவிதை வாசிப்புக்களை செய்தவர். இந்த வகையில் - மருதூர். ஏ. ஹசன் மேற்குறித்த கருத்துக்களின் பின்னணியில் வைத்து அடையாளம் காட்டப்படவேண்டியவராக இருக்கிறார்.

'குருதிப்பூக்கள்' எனும் தொகுதி மூலமும், 'அநாமிகா' எனும் இரண்டாவது தொகுதி மூலமும், இன்று ''மழையும் சிறையும்'' எனும் இத்தொகுதி மூலமும் மருதூர் ஏ. ஹசனின் கவிதைகளை ஒட்டு மொத்தமாக சுவைக்கும் சந்தர்ப்பங்கள் நமக்கு கிடைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக ஹசனின் கடந்த இரு தொகுதிகள் காணப் பட்டது போன்று இத்தொகுதியின் கவிதைகளிலும் பாடுபொருகளாகவும் காதலையும் சமகால யதார்த்த முகங்களையும் நாம் தர்சிக்கக் கூடியதாக இருக்கிறது.

எனவே, நாம் குறித்தது போன்று, இன்றைய இலங்கையின் இளைய தலைமுறையைச் சார்ந்த (குறிப்பாக 80க்கு பின் தோன்றிய) படைப்பாளிகளிடம் காணப்படும் பண்பு களையே ஹசனின் கவிதைகளிலும் நாம் அனுபவிக்கின்றோம் கடந்த கால காதல் கவிதைகள் போன்று வெறுமனே பெண்களின் அங்க வர்ணனைகளையோ - அல்லது காதலிக் காய் அழுது வடியும் சுய புலம்பல்களையோ ஹசனின் கவிதைகளில் நாம் காண முடியாது. அதற்கு அப்பால் காதலுடன் இன்றைய வாழ்வுச் சூழலின் யதார்த்த நிலைப் பாடுகளையும் பார்க்கிறோம். அதாவது, காதல் என்ற உணர்வினைக்கூட சமகால வாழ்வின் உக்கிரம் எவ்வாறு பாதிக்கின்றது என்பதையும் அந்தப் பாதிப்பு ஏற்படுத்தும் உள்ளத்து உணர்வுகளையும் கவிதையாக்கங்களாக பார்க் கிறோம்.

மேலும் சமகால தமது இருப்பின் சூழல் ஏற்படுத்தும் அனுபவ தாக்கம், தாம் கொண்டிருக்கும் மனித நேயத்தி னூடாக எத்தகைய சோக வார்ப்புகளை உரு வாக்குகின்றன என்பதை ஹசனின் படைப்புகள் உணர்த்துகின்றன.

இத்தொகுதியின் முதல் கவிதையான 'மழையும் சிறையும்' எனும் கவிதையில் -

''கடல் அலை
உதைத்து தள்ளிய
மனித பிரேதம்
என்னருகில்
காவலுக்கு''
என உரைக்கும் பொழுதும் சரி.
என்னை
துண்டு துண்டாக
நீங்கள் வெட்டுங்கள்
ஆனால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது சமூகம் வாழும்
நிலத்தை மட்டும்
விட்டு விடுங்கள்.

என்று 'நண்பனுக்காக நான்' எனும் கவிதையில் சொந்த மண்ணுக்காக யாசிக்கும் பொழுதும் சரி இன்றைய மனிதனின் - அதிலும் குறிப்பாக இலங்கை மனிதனின் முகம் தெரிகிறது.

இவ்வாறு 'இரவு' 'அப்பா' 'கனவில் இரண்டு பேர்' போன்ற கவிதைகளிலும் இலங்கை மனிதனின் முகத்துடன் சர்வ தேசிய மனிதனின் நிஜத்தையும் காண்கிறோம்.

இப்படியாக, ஹசனின் ஒவ்வொரு கவிதையின் பாடு பொருள்களாக காதலும் சமூகமும் பின்னிப் பிணைந்து வெட்டியும் ஒட்டியும் சினிமா காட்சி படிவங்களைப் போல் வந்து விழுகின்றன. எப்பொழுதும் ஒரு கலைப்படைப்பு என்பது அக்கலைப்படைப்பு தொடங்கும் பொழுது ஒரு கலைஞன் சந்திக்கும் உணர்ச்சிக் கோலத்தை அக்கலைப் படைப்பு முடியும் வரை தங்க வைத்து கொள்ள வேண்டும். Colarge முறையுடன் கவிதையில் பல்வேறு தன்மைகள் கொண்ட காட்சிகள் தொகுக்கப் பெற்றாலும், உணர்ச்சி ஒரு பொதுவான தளத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான், கலைப்படைப்பு தரும் அனுபவம் பூரணமாகும். கவிதைக்கும் இக்கூற்று பொருந்தும்.

மேலும், ஹசன் உருவாக்கம் பெற்ற கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை - தடுக்கி விழுந்தாலும் கவிஞன் மேல் விழ வேண்டும் என்று அன்றுகாலம் தொடக்கம் கூறப் பட்டு வரும் ஒரு கூற்றாகும். பிரச்சினைகள் உக்கிரமடையாத காலகட்டத்திலேயே அப்படியான ஒரு கருத்து முன் வைக்கப்பட்டது என்றால் இன்று அந்த மண்ணும் அதன் மக்களும் அடைந்து வரும் உக்கிரமான அனுபவங்களுக்கு பின்னே கவிதை என்பது தவிர்க்க முடியாத ஓர் ஊடகமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்காணப்பட்டிருக்கும் காலகட்டத்தில் அந்த மண்ணில் இன்னும் அதிக அளவான படைப்பாளிகள் தோன்றுவது தவிர்க்க முடியாது அல்லவா? அந்த வகையில் மருதூர். ஏ. ஹசன் கூட அத்தகைய கவிஞர்களில் ஒருவராகவும் திகழ்ந்து, நவீன கவிதை மூலம் காதலை பாடினாலும் கூட அவர் தாம்வாழும் மண்ணின் யதார்த்த செய்தி களையும் பதிவுகளாக தருகிறார்.

கவிதை நடையிலும் - உத்திகள் கையாள்வதிலும், பாடு பொருளிலும் தனித்துவத் தேடலும் மனிதநேய உணர்வும், உள்ள ஒரு படைப்பாளியாக ஹசன் திகழ்வது மகிழ்ச்சிக் குரியது.

மருதூர். ஏ. ஹசன் ''மழையும் சிறையும்'' எனும் இத் தொகுதி மூலம் தனது கவிதை வளர்ச்சியில் இன்னுமொரு சுவட்டை பதித்துள்ளார் எனலாம்.

55 B / 4, 3ம் குறுக்குத் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதாசாகரத்தின்
# சாளரத்தினூடே---

- வி. ஜெகதீஸன் -

காலம் புதுக்கவிதையை அங்கீகரித்திருக்கிறது! அதற்கு மகுடம் சூட்டும் விழா வொன்றும் நிகழ்ந்திருப்பதாய் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது! பாடல்களை முணு முணுப்பது போல், கவிதைகளை முணு முணுக்கும் வேளை தொலைவில் இல்லை என்பதை சொல்லி வைத்திருக்கிறது.

ஏராளமான புதிய கவிஞர்கள் ''கவிதாசாகரம்'' மூலம், இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் இவரும் ஒருவர். மருதூர். ஏ. ஹஸன் இப்போதிருக்கும் இளங்கவிஞர்கள் வரிசையில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர்.

புற்றீசல்கள் போல் புறப்பட்ட இந்த இளம்கவிஞர்கள், ராஜாளிகளாக மாறியிருப்பது விந்தைதான்! அகத்தியன் கங்கையை தன் கமண்டலத்துள் அடைத்ததைப் போல இந்த இளைய கவிஞன் அவனுள் ஒரு கவிதைக் கடலை மூடி வைத்திருந்தது அற்புதம் தான். இராணுவ வாகனச் சுவடுகளை தன் காதலியின் முத்தத்திற்கு ஒப்பிடும் வித்தியாசமான இன்றைய இளம் கவிஞர்களின் உவமை, மரபுக்கவிதைக் காரரை புதுக்கவிதையாளர்கள் பால் கொஞ்சம் திரும்பி உட்கார வைத்துள்ளதில் திருப்திதான். அந்தக்கைங்கரியத்தில் மருதூர். ஏ. ஹஸனின் பங்களிப்பும் கணிசமானது,

ஹஸனின் கவிதைகள் அதிகமான காலத்தைப் பேசின. பழைய சிக்கெடுப்புகளுக்கு வக்காளத்து வாங்கப்போகாமல் புதிய ஒரு பாணியை அவர் கையாண்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமச்சிக்கல்களுக்குள் என்றும் உழன்றதில்லை. சுதந்திர மான காற்றைச் சுவாசிப்பது போல் இவரின் கவிதை களின் முடிவு எனக்களித்தது. அதனை வாசகர்களும் நிச்சயம் அனுபவித்திருப்பார்கள், அல்லவெனில் "மழையும் சிறையும்" அனுபவிக்க வைக்கலாம்.

அடுத்தவனின் படைப்புகளுக்கு தீவைத்து தான் அதில் குளிர்காயும் தன்மையில்லாதவர் ஹஸன்.

ஹஸனின் கவிதைகளில் இனம் புரியாத ஏதோ வொன்று இருப்பதாக எனக்கு விமர்சன மடல்கள் வரும். இதுவரை அதைத் தேடி இளைத்தவர் பட்டியலில் நானும் இருக்கி றேன்.!

துப்பாக்கி வாய்பட்ட தன் சின்னப் பிரதேசத்தின் சம்பவங் களை, தன் காதலியுடன் பகிரும் அவர், எனக்கு ஒரு வித்தியாசமான கவிஞராகத் தெரிகிறார்.

அவர் ஆற்றல் வீற்றிருக்க வாழ்த்துக்கள்!

லேக் ஹவுஸ்,

கொழும்பு - 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதூர் ஏ. ஹஸனும் அவரது படைப்புகளும்.

- எம். அப்துல் மஜீட் (S.S.P.)

எந்த நெருக்கடியான கால கட்டத்திலும் - வேலைப் பளு கூடிய நேரத்திலும் சரி - தினகரன் வாரமஞ்சரி யில் பிரசுரமாகும் மருதூர் ஏ. ஹஸனின் கவிதை களை நான் வாசிக்கத் தவறுவதில்லை. ஆயுதக்கலாச் சாரத்தின் ஊடாக காதல் கவிதைகளை எழுதிவரும் படைப்பாளிகள் வரிசையில் மருதூர் ஏ. ஹஸனின் கவிதைகள் என்னை மிகவும் கவர்ந்துள்ளன.

ஆங்கிலக் கவிதைகளை அதிகமாக வாசிக்கும் எனக்கு - ஹஸனின் தமிழ்க் கவிதைகள் வித்தியாசமான போக்கையே என்னுள் தோற்றுவித்தது. நான் இவரது கவிதைகளை மட்டும் வாசித்தவனல்ல! மாறாக, அவ ரோடு சம்பந்தப்பட்ட டவர் மண்டபத்திலே மேடை யேற்றப்பட்ட அனைத்து நிகழ்ச்சிகளையும் பார்த் தவன் - (அப்பா இல்லாத ஊரில் - நாடகம் உட்பட)

அண்மையில் இவர் வெளியிட்ட 'அநாமிகா' புதுக் கவிதைத் தொகுதியோடு - ''மழையும் சிறையும்'' என்ற இக் கவிதைத் தொகுதியை ஒப்பிடும்போது - இவருள் ஒரு பரிணாமம் தெரிவதை அவதானிக்கலாம்.

இது தவிர - இத் தொகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ள ''மழையும் சிறையும்'' என்ற கவிதை - என் மனத்தைக் காயப்படுத்திய வண்ணமே இருக்கிறது. நான் வாகனத்திலே வேகமாகச் செல்லும்போது என் எதிரே வரும் செக்பொயிண்டைக் கண்டால் போதும்.! 'நீ - ஊருக்கு வரவேண்டும்' என்ற கவிதை நினைவுக்கு வருவதுண்டு. இது போன்ற கவிதைகளையும் ஹஸன் தொடர்ந்து எழுதவேண்டும் - எனவாழ்த்துகிறேன்.

கிழக்கு மாகாண சிவில் பாதுகாப்பு, இணைப்பு அதிகாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனப்பதிவுகள்

**- மருதூர். ஏ. ஹஸன் -**

தினகரன் வாரமஞ்சரியிலே எனது கவிதை வெளி வந்தால் - மறு நாள், அல்லது அதற்கு மறு நாள் எனக்கு சில கடிதங்கள் வரும். அந்தக் கடிதங்களுள் — மருதமுனையிலிருந்து வரும் கடிதங்களில் - ஒருவன் ஒருத்தியின் பெயரில் எனக்கு ஏசி எழுதுவான். எழுதி விட்டு, வேறு ஒரு நாள் பார்த்து என்னைச் சந்திப்பான் நன்றாகப் பேசுவான், சிரிப்பான், ஜோக் அடிப்பான், அவன் எனது நண்பன். அவனும் கவிதை எழுதுகிறவன் - எழுதி, எழுதி, பேனா தேய்ந்து போனதன் பின்னர் தனக்கென ஒரு சஞ்சிகையை ஆரம்பித்து அதிலே பல கவிதைகளை அவன் எழுதுகிறான். அவன் எனது நண்பன்!

இது இப்படி இருக்க, மட்டக்களப்பு பல்கலைக் கழக விரிவுரையாளர் ஒருவர் எனது கவிதை வரிகளைப்பற்றி நன்றாக எழுதுவார். அவரது எழுத்துக்கள் என்னை உயர்த்தியது. மட்டுமல்லாமல்,

"வீரமும் காதலும்" என்ற கவிதையில்

"பதுங்குக் குழிகளுக்குள்
இருந்து
கருத்தரிக்கும்
குழந்தை
வீரமாகப் பிறக்கும்"

என்ற வரிகளை

தினகரன் வாரமஞ்சரி கவிதாசாகரத்திலே பார்த்த யாழ்ப்பாண மனித நேயம் படைத்தோர் எனக்கு கடிதம் எழுதினார்கள். என்னை அவர்கள் வாழ்த்தி னார்கள். இந்தக் கவிதை வரிகள் யாழ்மக்களுக்குள் பேசப்பட்டதாகவும் நான் அறிந்தேன். எனது கவிதைகள் எனக்கு மட்டும் சொந்தமானதாக இருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லை - அது வேறு ஒரு சமூகத்துக்கும் பயன் பாடுள்ளதாக அமைந்ததை நான் அறிந்தேன், யாழ்ப் பாணக் கரை ஓரங்களிலே எனது கவிதைகளுக்கு கால் முளைத்தது. அந்தச் சமூகத்தின் காலமும், நேரமும், பதுங்குக் குழிகளுக்குள் இருப்பதால்- நானும் பதுங்குக் குழிகளை நேசித்தேன். மக்கள் எனது கவிதைகளை நேசித்தார்கள். நான் கிழக்கிலே பிறந்தாலும், வடக் கிலே தெரியும் பனை மரங்களை கவிதை மூலம் காட்டினேன், ஒரு கவிதையிலே,

கிரி மலையின்
கரையோரங்களிலே
நானும்,
நீயும்,
பதித்த –
பாதங்களின் தடங்கள்
இருக்கின்றதா....?
அல்லது
இறந்து விட்டதா...?

அந்த நெருக்கடியான சூழலும், என் கவிதைகளுக்குள் சிக்கியிருந்தது. இது தவிர,

தினகரன் வார மஞ்சரி கவிதா சாகரக் கவிதைகளில்– ஐந்து கவிதைகளைத் தெரிவு செய்து இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்பான ''கலைப்பூங்கா'' நிகழ்ச்சியில் யாழ் பல்கலைக் கழக பேராசிரியர் ஒருவர் கவிதைகளைப் பற்றி பேசினார்- அந்த ஐந்து கவிதைகளுள் எனது 'கனாக்கள்' எனும் கவிதையும் விமர்சனத்துக்காக எடுத்திருந்தார். அந்த் விமர்சன உரை எனது கவிதைகளுக்குக் கிடைத்த விருது என்றே நான் கருதினேன். பேராசிரியர் செய்த விமர்சனம் என் மனத்தைக் கொள்ளை கொண்டது.

இவைகள் எல்லா வற்றையும் விட எனது 'அநாமிகா' புதுக் கவிதைத் தொகுதியின் அறிமுக விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சரசவிபாய' மண்டபத்திலே நடை பெற்ற போது மேமன் கவி உட்பட அதிகமானோர் எனது கவிதை களைப் பற்றி பேசினார்கள். அந்த மேடையில் கே. எஸ். சிவகுமாரன் அவர்கள் 'அநாமிகா' கவிதை களைப் பற்றி விமர்சனம் செய்தார்....என் இதயத்தில் இன்னும் அழியாமல் இருக்கும் அந்த விமர்சனம்......

''எனக்கு புதுக்கவிதைகள் பிடிப்பதில்லை- ஆனாலும், மருதூர். ஏ. ஹஸனின் கவிதைகள் என்னைக் கவர்ந்து விட்டது. ஆயுதக்கலாச்சாரம் நிரம்பிய இக்கால கட்டத்தில் காதல் ஊடாக ஆயுதக் கலாச்சாரத்தையும் வன்முறைகளையும், சொல்லுகின்ற விதம் என்னை மிகவும் ஈர்த்து விட்டது. அவர் புதுக்கவிதை எழுத கையாழுகுன்ற விதம் புதுமை என்றே நான் எண்ணு கின்றேன். ஈழத்து புதுக் கவிஞர்களை - அல்லது புதுக் கவிதைகளுடன் எனக்கு அதிக ஈடுபாடு கிடையாது. இருந்த போதிலும் இவரது கவிதைகள் ஒரு தூண்டு தலை என்னுள் ஏற்படுத்தி விட்டது. காலத்தை வெல்லக் கூடிய இக்கவிதைகளுக்கு ஆயுள் அதிக மென்றே நான் கூறுவேன்''

கே. எஸ். சிவகுமாரன் அன்று பேசிய பேச்சு ஒன்றுமே எனக்கு போதுமானதாக இருந்தது.

பதுங்குக் குழிகளைப் பற்றியும் ஆயுதங்களைப் பற்றி யும் - இரத்தத்தைப் பற்றியும் விமானங்களைப் பற்றி யும் - பிரேதங்களைப் பற்றியும், இராணுவம், கவச வாகனம், அகதிகள், நெருக்கடி, வன்முறைகள் - இப்படியான கருவை மையமாக வைத்து எனது- கவிதைகள் வெளிவரத் தொடங்கின எனலாம். வன் முறை மலிந்த இடங்களிலே வாழும் இளைஞர்களின் தாகத்தை தணியவைக்கும் கவிதைகளாக எனது கவிதைகள் அமைந்தது. மேல் மாகாணத்தில், அல்லது மத்திய மாகாணத்தில் வாழும் சிலருக்கு எனது கவிதைகள் புரியாமல் போகலாம். இருந்தும், வட- கிழக்கிலே வாழும் தமிழ் - முஸ்லீம்கள் இக்கவிதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை - தங்களின் இதயங்களிலே ஒட்டி வைத்திருக்கிறார்கள். எனது இரண்டாவது தொகுதியான - இத்தொகுப்பில் பிரசுரமாகியுள்ள அதிகமான கவிதைகள் தினகரன் வாரமஞ்சரியில் வி. ஜெகதீஸன் அவர்கள் தொகுக்கும் ''கவிதாசாகரம்'' பகுதியில் வெளியானவைகள். அவ்வப்போது வெளியான கவிதைகளை ''மழையும் சிறையும்'' எனும் தலைப்பின் கீழ் மருதூர் பணிமனை வெளியீடாக வெளிவருகின்றது. இத்தொகுப்பு காலத்தை வெல்லும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

408, மாவடி ரோட், சாய்ந்தமருது - 01 கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு

மருதூர் பணிமனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மழையும்

சிறையும் 20 அதற்காக 23 இன்னு
மொரு பெருநாள் 25 வீரமும் காத
லும் 28 இரவு 30 நண்பனுக்காக
நான் 32 தூங்காத விழிகள் 35
காதல் புனிதமானது 37 மீறல் 39
1993 அடியில் 41 அசோகவனத்தி
லிருந்து 43 ஒத்திகைதேவையில்லை
45 அப்பா 47 மதமும் காதலும் 50
இன்னுமெனக்கு ஞாபகமிருக்கிறது 52
மார்கழிமாதக் கனவு 55 கறுப்பி 58
நீ ஊருக்கு வரவேண்டும் 59 எனக்கு
ஒரு கல் வேண்டும் 62 புத்தளம் உன்
னை வரவேற்றது 63 காதல் தீபத்
தில் ஒரு பெருநாள் 68 ஒருவன்
இறைவன் 71 காதலிகள் ஜாக்கிரதை
74 அரசமரமும் எனது வேதமும் 76
கனவில் இரண்டுபேர் 78 அவர்கள்
வருவார்கள் 82 அவளுக்காக நான்
85 இனி நீ ஓடத்தேவையில்லை 88
கனாக்கள் 91 உனது ஊரில் நீ நலமா
93 *01 - 09 - 1992* 95

சிறையும் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்

தந்தைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழையும் சிறையும்

மழை பெய்தது
அப்போதும்
அந்தத் தோணியின்
ஓரத்தில்
மண்ணைக் கோரி
நீர் வராமல்
தடுத்தேன்
மின்னல்
மழையின் வேகத்தை
இனம் பிரித்துக்
காட்டியும்
நான்
சிறையில் இருந்தேன்!

O

வெளியே
போக
முடியாத வாறு
காற்று வீசியது..
கண் இருண்டது...
கடல் அலை
என்னருகில்
வந்து போனது!

O

தாங்கமுடியாத
வேதனையால்
காற்றை நேசித்தேன்..
மழையை நேசித்தேன்...
நேசித்தும் கொடுமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு
சுவர்கள் இல்லை...
ஆனால்
இயற்கையின் கொடுமை
ஏராளம்!

O

வானம்
அருகில் இருந்து
அழுதுபோதுமென்று
நினைத்தபோது
இருள்
சிறைக்கதவை
திறக்கக்கூடாது
எனஎண்ணி
கறுப்பு மை பூசியது.

O

எனது
இரண்டு கண்கள்.
இரண்டு கைகள்..
இரண்டு கால்கள்...
ஒரு தோணி
கடல் பக்கத்தில்
மையவாடி
இவைகளோடு
உறுதியான
எனது மனசு!
இவைகள் இருந்தும்
பக்கத்தில் கிடந்த
ஒரு
மனித பிரேதத்தை
என்னால்
இனம்காண
முடியாமல் போனது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் அலை
உதைத்துத் தள்ளிய
மனித பிரேதம்
என்னருகில் காவலுக்கு.

O

சிறையில்
இருக்கும் எனக்கு
ஒரு
காவல்
.........?

O

நான்
இரவில்
முதல்
உனது
பாதத்தைத்தான்
பார்த்தேன்...
(அவளை நினைத்துக் கொண்டு)
காவல் காரனின்
கால்களைத் தொட்டேன்!
அது
காவல்காரி.

O

ஒரு
மார்பகத்தோடு
என்னை
காவல் புரிய வந்த
ஒரு காவல்காரி!

'கவிதாசாகரம்'
- தினகரன் வாரமஞ்சரி -
10 - 11 - 1991



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்காக

இந்த
தேசத்தை படைத்த
இறைவனுக்கு
நானும், நீங்களும்
ஏதாயினும்
செய்ய வேண்டுமே
அதற்காக...

O

உங்கள்
கல்லூரி வாழ்க்கையில்
வருடங்களாக இல்லாது போனாலும்,
மாதங்களாக இல்லாது போனாலும்,
வாரங்களாக இல்லாது போனாலும்,
சில நிமிடங்களாவது
நான்
கலந்திருக்க வேண்டுமென
நினைப்பேனே...
அதற்காக,

O

என்
கவிதைகளையும்,
என் கட்டுரைகளையும்,
என் விமர்சனங்களையும்,
என் நாடகங்களையும்,
கலை நிகழ்ச்சிகளும்
யாருக்காக
என்னும் போதெல்லாம்
அவைகள்
உங்களுக்காக
என்பேனே
அதற்காக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு
சோகப் புத்தகத்துள்
சேர்க்கமுடியாத
ஒரு
சந்தோஷக் கட்டுரையை
உன்
இதயப் பதிப்பகத்தில்
அச்சிட வந்தேனே
அதற்காக...

O

'காதல்'
எனும் நாவலை வாசிக்கும்
ஒரு
வாசகனாக
நான் மாத்திரம்
இருப்பேன்!
அதற்காக...
இந்த காதல் உருவானது.

O

கடைசி பக்கத்தை
யாருக்கும் காட்டாமல்
பத்திரப் படுத்தி வைக்கும்
காதலிக்கு
இக்கவிதை
சமர்ப்பணம்.

'கவிதாசாகரம்'
- தினகரன் வாரமஞ்சரி -
08 - 07 - 1990


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னுமொரு பெருநாள்

ஒவ்வொரு நாளும்
வரும்
நாட்களை விட
ஒரு நாள்
போதுமானது!
இந்தப்
பெருநாளைக்கு
உனது வீட்டின்
அலசலில் வாழும்
"தமிழ் சகோதரிகளை"
அழைத்து
பெருநாள்
விருந்துகொடு!

O

நீண்ட நாட்களாக
நிறை வேறாமல்
இருக்கும் கனவு
பெருநாள் தினத்திலாவது
நிஜமாக
உரு மாறட்டும்!
இன்னும்
பத்து வருஷத்துள்
நாம்
ஆயுத கலாசாரத்துள்
வாழ்வோமென்று
'கம்பியூட்டர்' உலகம்
சொல்லிக் கொள்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது
உணவு முத்திரைக்கு
ஆயுதங்கள்
நாம் பெறலாம்!

O

எப்படித்தான்
இருந்தாலும்
எமது
அப்பாக்களும்
அம்மாக்களும்
வளர்த்துவிட்டுச் சென்ற
ஸ்நேகம்
சிகரம் போன்றது.

O

இந்தப்பெருநாளுக்கு
உனது வீட்டின்
அலசலில் வாழும்
தமிழ் சோதரிகளை
அழைத்து
பெருநாள்
விருந்துகொடு!

O

எல்லோரும்
அணிய விரும்பும்
இணவாத ஆடைகளை
நாமும்
அணிய வேண்டுமா?
கோடையாக இருந்தாலும்
குளிராக இருந்தாலும்
வேண்டாத ஒன்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருநாள்தினத்தன்று
உனதுவீட்டிற்கு
நானும்வருகிறேன்
அவர்களையும்
அழைத்துவை!

'கவித்தாசாகரம்'
– தினகரன் வாரமஞ்சரி –
05 - 04 – 1992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரமும் காதலும்

எந்தக் கரையில்
நான் இருந்தாலும்
உன்மேல்
எவ்வளவு அக்கறை!

O

யுத்தங்கள்
ஓய்ந்து கொண்டே
செல்கின்றன...
ஆனால்
எமது
காதல் யுத்தம்?

O

பதுங்கு குழிக்குள்
இருந்து
கருத்தரித்து
பிறக்கும்
குழந்தை
வீரமாக இருக்கும்
என்று
நீ சொல்லிய
வீரவார்த்தைகள்
என்காதுகளின்
ஓரங்களில் இன்னும்
ஒட்டிக் கொண்டு தான்
இருக்கிறது!

O

இராணுவச் சிந்தனைகள்
மலிந்த
இந்தக்
காலப்பகுதியில்
எனது சிந்தனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு
தூரசாகவே இருக்கும்,

O

எனது
பாதங்களுக்குக் கீழ்
ஓடிக் கொண்டிருக்கும்
சாக்கடை நீரை
எண்ணி
கசங்கிப்போகும் மனம்
பின்பு
உன்மேல்உட்கார்ந்து
குளிர் காய்வதை
சுகமாக எண்ணும்!

O

இரவிலும்,
பகலிலும்,
இரைந்து கொண்டே
செல்லும் விமானம்...
அறியாத
ஒரு இடத்தில்
கருத்தரித்து
பிறக்கும் குழந்தை
வீரமாக இருக்கும்
என்று
நீ சொல்லும்
வீரவார்த்தைகள்
எனது
காதோரங்களில்
இன்னும்
ஒட்டிக்கொண்டுதான்
இருக்கிறது.

'கவிதா சாகரம்'
– தினகரன் வாரமஞ்சரி -
17 - 05 - 1992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவு

அவர்கள்
சுட்டார்கள்......
ஆசை தீரச் சுட்டார்கள்!
வணக்கஸ்தலங்களை
தகர்த்தார்கள்...
எனது
யந்திர உணர்வு
அந்நியமாக்கப்பட்டு
நான்
சிறையிலிடப்பட்டேன்!
விடியல்
என் மனதை உதைத்தது..
எழுந்தேன்
ஆங்கிலேயன்
இந் நாட்டை விட்டு
வெளியேறிச் சென்றதைப்போல
ஒரு உணர்வு
என்னுள் எழுந்தது!

O

அசோக வனக்கரையில்
அவர்கள்
கால் நனைத்துக் கொண்டு
சென்றார்கள்......!
செல்லும் போதும்
சுட்டுக் கொண்டே சென்றார்கள்!!
அப்போது
என் மன அச்சகம்
தேசியப்பால்அருந்திய
ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைவீரனின்
எண்ணக் கோலங்களை
பதிப்பித்துக் கொண்டிருந்தது!

O

நான்
மீண்டும்
ஒரு புது மனிதனாக எழுந்தேன்...
மனிதர்கள்
எறும்பாக நகர்த்து சென்றார்கள்.

- முனைப்பு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பனுக்காக நான்

என்னை
துண்டு துண்டாக
நீங்கள் வெட்டுங்கள்
ஆனால்
எனது சமூகம் வாழும்
நிலத்தை மட்டும்
விட்டு விடுங்கள்.

O

எனது
கல்லூரியையும்,
காதலியையும்,
நண்பர்களையும்,
உறவினர்களையும்
பிரிந்து செல்லலாம்...
ஆனால்;
இரண்டு நூற்றாண்டுக்கும்
கூடுதலாக வாழ்ந்த
நிலத்தை விட்டு
பிரிந்து செல்வது
எப்படி?

O

என்து தோல் மென்மையர்னது...
தலை முடி கறுப்பானது...
நகம் சிகப்பானது...
இவைகளைத்தந்தேன்
போதாமலா
நிலத்தையும்
கேட்கிறீர்கள்...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது
இரத்தங்களில்
கலந்துள்ள
சிநேகம்
உயிர்வரை
சென்றபின்பும்
பிரிதல் என்பது
எவ்வளவு
கடினம் தெரியுமா?

O

நீங்கள்
''மாட்டை''
வணங்கும் போது
நாங்கள்
அதனை வெட்டி
இறைச்சியை
உண்ணக் கூடாது என்று
எண்ணிய பின்பும்
எங்களுக்குள்
இப்படி ஒரு நிகழ்வு!

O

சித்திரைக்கு
புது ஆடைகள்
வாங்கும் போதும்..
நோன்புப்பெருநாளைக்கு
புதுஆடைகள்
வாங்கும் போதும்...
நாங்களும்,
நீங்களும்,
பரிமாறிக் கொள்ளும் விதம்
உண்மையிலேயே புதுமைதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி
இருந்த பின்பும்
நிலத்தை விட்டு
பிரிதல் என்பது
எவ்வளவுகடினம்!

O

காந்தியின்
திரைப் படத்தை
வீடியோவில்பார்த்து விட்டு
நாம் செய்த
ஒப்பந்தத்தை
உங்களின் பைகளுக்குள்
வைத்துக் கொண்டு
பேசுகிறீர்கள்!

O

என்னை
துண்டுதுண்டாக
நீங்கள் வெட்டுங்கள்...
ஆனால்,
எனது சமூகம் வாழும்
நிலத்தை மட்டும்
விட்டுவிடுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூங்காத விழிகள்

கவச
வாகனத்தை விடவும்
பாரமான
உனது
கடித எழுத்துக்களை
நான்
இன்னும்
சுமந்து கொண்டுதான்
இருக்கிறேன்.

O

எனது ஊரில்
சேவல்கள்
கூவுவதில்லை...
காகங்கள்
கரைவதில்லை...
நாங்கள்
தூங்குவதுமில்லை!

O

சுதந்திரத்தை
புதைத்துவிட்டு
அதற்கு மேல்
அமர்ந்து
லாவகமாக
சுதந்திரம் பேசும்
நாங்கள்
தூங்குவதுமில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிகளுக்குள்ளே
எண்ணை
ஊற்றியிருக்கிறோம் –
இரவுமுழுதும்
எரிந்து கொண்டே
இருக்கும்.

O

கவச வாகனத்தை விடவும்
பாரமான
உனது
கடிதங்களை
நான் சுமந்து கொண்டு
எப்படித்தூங்குவது ?

'கவிதாசாகரம்'
– தினகரன் வாரமஞ்சரி –
1992 – 06 – 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல் புனிதமானது

இன்னும்
மழை பெய்து கொண்டே
இருக்கிறது.
உன்
நினைவுகளைப்போல!

O

இறந்தகால
நினைவுகளை
நினைத்து
என்
இருதயத்தை
காயப்படுத்தும்போது
உன் கடிதங்கள்தான்
எனக்கு
ஆறுதல் தருகின்றன!

O

உன்முகம்,
கூந்தல்,
பாதம்,
விழி,
தேகம் எல்லாம்...
எனக்காக
இறைவன்
உனக்குத் தந்துள்ளான்!

O

நீ
அழுதாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை
அழகு என ரசிக்கிறேன்,
ஏ சினாலும்
அதை
புனிதமாக
மதிக்கிறேன்.
1991ம் ஆண்டின்
வாசலில்
உன் பெயர் எழுதப்பட்ட
ஓவியங்கள்
சாலைகளிலெல்லாம்
ஒட்டப்படும்
என்
மன வீதியைப் போல!

O

நமது
காதல்
புனிதமானது.
என்பதை
உறுதிப்படுத்துவதற்காக
1991ம் ஆண்டின்
முதல் தேதியில்
ஒரு
மடல் அனுப்புகிறேன்
பெற்றுக்கொள்.

'கவிதாசாகரம்'

- தினகரன் வாரமஞ்சரி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்குகள்
தவறுவதைப்போலவே
நமது
பிணக்குகளும்
தவறிப் போகின்றன!

O

இந்த பூமியில்
நிஜம் மாத்திரம்
உயிர் வாழ்வதில்லை.
மாறாக...
பொய்யும் வாழும்.
ஆனால்,
உயிர் வாழ்வதில்லை!

O

காகிதத்தில்
எழுதிப் பரிமாறுவது
காதலுக்கான
ஆதாரமல்ல...
அது
உறவுக்கும்
ஊடலுக்குமான
ஒரு ஒத்திகை!

O

புறச் சூழலை நம்பி
ஏமாந்து போவதைவிட
உள் மனதுள் எழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலனங்களினால்
அவஸ்தைப்படுவது பெரிது!
இந்த
சமூகப்புறச் சூழலையும்
மனித மரபு(க்)
கோடுகளையும்
தாண்ட நினைக்கும் நான்...
அதை
ஒரு மீறலாக
நினைத்தே
எனது யாத்திரை
தொடர்கிறது!

O

எல்லாவற்றையும் விட
மீறி
ஒரு
சமூக மாற்றத்தை
உண்டு பண்ண
நினைக்கும் போது
நான்
ஆறுதல் அடைகிறேன்.

'கவிதாசாகரம்'
- தினகரன் வாரமஞ்சரி -
28 - 07 - 1991



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1993ம் ஆண்டின் அடியில்

கல்லடிப் பாலத்தின்
இரும்புத்தூண்களை
தலையால்
எண்ணிக் கொண்டு
அதே வேகத்தில்
அவளது
வீட்டுக்குச் சென்றேன்!

O

வாசலில்
போட்ட கோலம்
என் மனத்துள்
ரம்மியத்தைத்தர...
விதியின்
இரு மருங்கிலும்
பனியை அள்ளி
தன் தலையிலே
சூடிக் கொண்ட
மூங்கில்மர
படை வீரர்களை
மறந்தேபோனேன்!

O

புது வருட நுனியில்
அமர்ந்தபடி
தயிர்ச் சாதமும் -
பலகாரமும் –
என் வயிற்றை நிரப்ப;
இருள் கவ்வியது.

O

மஞ்சலும்
தலையிலே பூவுமாய்
அருகே வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலம் விசாரித்தாள்...
ஊரின் உறவினர்கள்
எப்படி என்றாள்?

O

1993ம் ஆண்டின்
நடுப்பகுதிக்குள்
கனடா போய்விடுவேன்
என்றாள்.

O

மீண்டும்
கல்லடிப் பாலத்தின்
இரும்புத் தூண்களை
தலையால் எண்ணிக் கொண்டு
எனது ஊரை நோக்கி
விரைந்தேன்!

O

ஒரு
அழகிய சேலையின்
ஓரத்திலே இருக்கும்
'பூவை' (த்)
தொலைத்து விட்ட
ஒருத்தியைப் போல
அவள்
பாலத்துக்கு அப்பால்
நின்றாள்.

O

எனக்கு
படை வீரர்களை
கண்டதும்...
தயிர்ச்சாதமும் –
பலகாரமும்-
நொடிப் பொழுதில்
சமிபாடடைந்து போயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அசோக வனத்திலிருந்து

வெற்றிடங்கள்
நிரப்பப்படுகின்றன,
என்னுள் இருந்த
வெற்றிடமும்
நிரப்பப்பட்டது...
உன்னால்.

O

வானம்
தூண் இல்லாமல்
அந்தரத்தில் இருக்கின்றது...
காற்றும்
அழுக்காகாமல் இருக்கின்றது...
இவைகள்,
இறைவன் இருக்கின்றான்
என்பதற்கான
சில உதாரணங்கள்.
ஆனால்,
நீ
என்னுள் இருக்கிறாய்
என்பதற்கு
என்ன உதாரணமிருக்கிறது!?
இருக்கிறது...
மனச் சாட்சி மட்டும்.

O

உனது கடிதங்கள்
புகைப்படம்,
முத்தங்கள்,
சிரிப்பு-
அணைப்பு -
ஆதரிப்பு -
எல்லாம் பொய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் இதயத்துள்
நான் இல்லாதவரை?

O

உலக இலக்கியத்துள்
புனிதமான ஒரு படைப்பு
'கவிதை'.
அந்தக் கவிதையை
புனிதப்படுத்தும்
கதாபாத்திரம் நீ.....!
நீ
புனிதமாக இருக்காதவரை
எனது கவிதைகளும்
புனிதமாக இருக்காது.
எனவேதான்
அன்பானவளே...
உன்னிடம்
ஒரு
பணிவான வேண்டுகோள்!
எனது கவிதைகளை
புனிதப்படுத்துவதற்காக
நீ
புனிதமாக இரு.

'கவிதாசாகரம்'
- தினகரன் வாரமஞ்சரி -
31 - 03 - 1991



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒத்திகை தேவையில்லை

நெடுஞ்சாலையாய்
உன் நினைவு
நீண்டு கொண்டே இருந்தது!
நீ
நெருப்பைஅள்ளி
கொட்டும்வரை.

O

உன்
அதிகாரத்தை
பரவலாக்கத்தானா
அன்பைவிதைத்தாய்?

O

நீ
நினைக்கின்றாய்..
கூந்தல்களால்
உன் முகத்தை
மறைத்து விட்டோமென...;
ஆனால் சனம்
உன்னைப்
பார்த்துக் கொண்டே
இருக்கிறது!

O

உன்னால்
எனக்கு ஏற்பட்டது
விபத்து அல்ல;
ஒரு நெறி பிறழ்வு!

O

உன்னை
ஒரு
தேசிய கீதமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்திருந்தேன்..
கீதங்களுள்ளும்
ஒரு ஒப்பாரியா..?
காதல் கவிதை எழுத
கற்றுக் கொண்ட எனக்கு
உனது
புத்திசாலித்தனமான
நடிப்புகள்
புதுமையாகத்தான்
இருந்தன!

O

உனக்கு
ஒத்திகை தேவையில்லை -
மேடைக்கு மேடை
வேஷம் போட்டு
காதல் நாடகம்
நடிப்பதற்கு
உனக்கு
ஒத்திகை தேவையில்லை!

O

நெடுஞ்சாலையாய்
உன் நினைவு -
நீண்டு கொண்டே இருந்தது...
நீ
நெருப்பை அள்ளி
கொட்டும் வரை!

*'கவிதா சாகரம்'*

*- தினகரன் வாரமஞ்சரி -*

14 - 04 - 1991



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'அப்பா'

இந்த
அழகானமடலை
நீ
எங்கேவாங்கினாய்..?
தலைநகர்
கடைத்தெருக்களில்
நானும் தேடினேன்
அழகானமடல்
கிடைக்கவில்லை.

O

கடந்தகால
ஆண்டுகளை
நினைத்துப்பார்க்கும்
நாமிருவரும்
எதைச்செய்தோம்
என்றில்லாமல்
அவர்கள் செய்தவைகளை
ஞாபகப்படுத்தும்
நோக்கில்
இந்த
புகைப் படத்தை
அனுப்புகிறேன்.

O

நீ
இதை
எந்தக் கடைத் தெருக்களிலும்
எவ்வளவு கொடுத்தும்
வாங்கமுடியாது!
பணம் கொடுத்து
உயிர்களை
வாங்கமுடியுமா.?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த ஆண்டுகளில்
நான்
சேகரித்து வைத்த
மனித படு கொலைகளை
ஒருங்கமைத்து
ஒட்டுச் சித்திரமாக்கி
அதை
ஒரு
புகைப்படம் எடுத்தேன்
எந்த ஓவியனும்
வரைய முடியாத
இந்த நிஜப் படம்
பெறு மதியானது
ஆகவே,
நீ
தினமும் காலையில்
எழும்பி
காலைக் கடன்
செய்வதைப் போல
ஒரு தரம்
படத்தைப் பார்த்து
இறைவனிடம்
மன்றாடு
மனித படு கொலைகளை
தடுக்கும் படி.

O

என்
'அப்பா'
மரணிப்பதற்கு முன்
எங்கள் வீட்டில்
ஒரு
நாய் இருந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மரணித்த பின்
'அப்பா'
அழுத கண்ணீரை
நான் நினைத்து
இப்போதெல்லாம்
அழுகின்றேன்.

'கவிதாசாகரம்'
- தினகரன் வாரமஞ்சரி -
14 - 01 - 1992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதமும் காதலும்

உயர்ந்த மலைகள்
எம்மை பிரிக்கவில்லை.
நீண்ட தூரம்
எம்மை பிரிக்கவில்லை.
'மதம்'தான்
என்னையும்
உன்னையும் பிரித்தது!

O

ஆசைகள் இருந்தது...
அழகு இருந்தது...
மொழி
இரண்டு பேருக்கும்
ஒன்றாக இருந்தது...
இருந்தும்
'மதம்'
இரண்டு பேருக்கும்
இரண்டாக இருந்தமையால்
நான்
உன்னில் இருந்து
பிரிகிறேன்!

O

தேயிலை, கோப்பி,
கருவா, ஏலம்,
இவைகளுக்கு மத்தியில்
எமது
சுவாசத்தையும்
உறவையும்
ஸ்திரணப்படுத்தும் நோக்கில்
ஒரு உண்மையை
விதைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு பேரும்
மறந்து போனோம்!

O

எனது மதத்தை
சுவாசமாக எண்ணும்
நானும்
உனது மதத்தை
நீ
இருதயமாக எண்ணுவதால்
நானும், நீயும்
பிரியவேண்டியதாயிற்று

O

என்னை
விரும்பிய நீ
என்னுடைய
மதத்தையும்
விரும்பியிருக்கலாம்...!
நீ
விரும்பினால்
தமிழில்
அச்சடிக்கப்பட்ட
எனது
வேத நூலை தருகிறேன்,
பனி படர்ந்த
நிலத்தில்
எனது
தடம் பதித்த
இடத்தில் வைத்து
வாசிக்கலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னுமெனக்கு ஞாபகமிருக்கிறது

இன்னுமெனக்கு
ஞாபகமிருக்கிறது ..
எங்களின் ஒருவனாக
எதிலும் அவனாக
எங்கும்
சென்று திரும்பியிருக்கிறான்,
ஆனால் அன்று மட்டும்?

O

திடகாத்திரமான உடல்;
பொது நிறம் –
அவனது தோள் -
என் கண்களை விட்டு
இன்னும் மாறவில்லை.
துவக்கைச் சுமந்த தோள்
எப்படி மாறும்?

O

அவன் வெளியே வந்திருந்தால்
தப்பியிருப்பான்...
எங்களில் ஒருவன்
சொல்லியிருந்தால்
அவன் வெளியே வந்து
உயிர்தப்பியிருப்பான்...!!

O

எங்களைச் சுற்றியிருக்கும்
இவர்கள்
சொல்லியிருந்தால்...
அவன் எங்களில் ஒருவனாக
இன்று இருந்திருப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மாலைப் பொழுது
ரத்தம் குடித்து
தலை சிவந்து
கண் தெரியாமல்
நடக்க முடியாமல்
தடுமாறிய பின்
இரவு வந்து
எங்களை அரவணைத்து!
எங்களில் ஒருவனை
நாங்கள் பறிகொடுத்தபின்
இரவை
அரவணைத்து என்ன பயன்?

O

வயல் அருகில்
காற்றைச்சுவாசித்து
மனித நேயத்தைவிரும்பி
வாலிப ரத்தம் சுமந்த
அந்த வாலிபன்
இன்னும் திரும்பி வரவில்லை.
அவன்
பாடசாலையில் ஓடும் போது
பந்து விளையாடும் போது
கெடற் அணிவகுப்பில்
செல்லும் போது......
இவைகள்
இன்னுமெனக்கு ஞாபகமிருக்கிறது.

O

அவனது கைகளை
வெட்டியிருக்கலாம்...
அவனது கண்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்தியிருக்கலாம்...
அவனது கால்களை வெட்டியிருக்கலாம்...
உயிரை மட்டும்
எங்களுக்கு??

O

அவன் ஆவி
தங்கவேலாயுதபுரத்தில்
பிரிந்து போனதாகக்கூறுகிறார்கள்?
உடல்
எந்த ஊரில் என்பது தெரியாது.

O

இன்னுமெனக்கு ஞாபகமிருக்கிறது...
அவர்கள்
ஒரு வாகனத்தில்
அனைவரையும்
அள்ளி ஏற்றிக்கொண்டு
வேகமாகப் போனது
இன்னுமெனக்கு ஞாபகமிருக்கிறது!

O

அவனது கால்கள்,
அவனது கைகள்,
அவனது தலை,
இவைகளுக்கு
என்ன நடந்திருக்கும்.?

— நிந்தவூர் கவியரங்கு —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மார்கழி மாதக்கனவு

கண் இமைகளை
கூரிய கத்தியால்
அறுத்தான்...
மெழுகு திரியைக்கொளுத்தி
உள்ளங்கையில்
விட்டான்...
நகத்தை வெட்டி எடுத்த பின்பும்-
தன்னைச் சுற்றிருக்கும்
இருட்டை
சாட்சியாக வைத்து
நான் சொன்னேன்...
என் கூடவே இருப்பது
மிதவாதம் மாத்திரம்தானென்று.

O

கதவு
இறுக மூடியது...
மனித சத்தம்
வண்டாய்
என்னைச் சுற்றியது...
நேரம்,
திகதி,
ஆண்டு,
பொழுது,
நிறம்,
சனம்,
எதுவுமே தெரியாதவாறு
நான் இருந்தேன்.

O

அவன்
ஒரு
மீசைக்காரன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரகலோகத்தை
இரண்டு கைகளிலும்
ஏந்திக்கொண்டு வருவான்...
அவன்
ஒரு
மீசைக்காரன்!
சனம்
மூட்டிய தீயில்
ஒரு மூலையில்
" மனிதம் "
நன்றாக எரியும்!
எரிய, எரிய,
மீசைக்காரன்
நரகலோகத்தை (க்)
காட்டிக் கொண்டே இருப்பான்.

O

குடும்ப உறவு தெரியாத
இனம் இல்லாத -
காதல் தெரியாத -
சமூகம் அறியாத -
குழந்தைகிடைக்காத
அந்த மீசைக்காரன்
எந்த நாட்டைச் சார்ந்தவன்?

O

சாந்தியைக் கொண்டுவந்து
அந்த
மீசைக்காரனுக்குக்கொடுத்தாலும்
கதவைத் திறக்கமாட்டான்!
இமைகள் -
மெழுகுதிரி விளையாட்டு -
நகம் -
இவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு
தினமும் வேண்டிய
ஒன்றாகப் போய்விட்டது!

O

அந்த மீசைக்காரன்
எனது இனத்தை மட்டும்
விசாரிக்கிறான்...
அவன்
இஸ்ரேலியனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கறுப்பி'

உங்களுக்கு
சொர்க்கத்திலா வேலை?
என்னையும்
சொர்க்கத்தில்
அனுமதிப்பீர்களா.?

O

அழகிகளுக்கு
மாத்திரம்
வேலை வாய்ப்புக்கொடுக்கும்
'ஏயார்லங்கா'
நிறுவனத்தின்
மொத்த வடிவமாக
உங்களை நான்
பார்க்கிறேன்!

O

உங்களால் உருவான
சந்தோஷங்களை மாத்திரம்
என்
இருதயத்தோடு சேர்த்து
முடிந்து வைத்திருக்கிறேன்!

O

அழகிகளை
அரசாங்கம்
கைது செய்தால்
யாருக்கு கஷ்டம்.?
'கறுப்பி'
நீ எங்கள்
மனசுகளில் வாழும்
புதுக்கவிதை!

'கவிதாசாகரம்'
– தினகரன் வாரமஞ்சரி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ ஊருக்கு வரவேண்டும்

நீ
கவனமாகவே
வர வேண்டும்,
கவனமாகவே
போக வேண்டும்!
நீ
எனது ஊருக்கு
வர வேண்டும்.
குண்டுச் சத்தங்களை -
வெடிச் சத்தங்களை —
அகதிகள் முகாம்களை —
நீ
பார்க்க வேண்டும்.

O

வரும் போது
''அடையாள அட்டை''
கொண்டு வருதல் வேண்டும்.
மகாத்மாவின்
மகளாக இருந்தாலும்
அவர்கள் உன்னை
சோதனை செய்வார்கள்.
அதனையும் தாண்டி
நீ வர வேண்டும்.

O

உனது
ஆடைகள் கசங்கலாம்-
உணர்வுகள் மாறலாம்—
புது
எண்ணங்கள்
தோன்றலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது-
கடல் பக்கமாக
ஓடி ஒளிக்க
வேண்டும் போல்
தோன்றலாம்.
ஆனால்
அது முடியாது!
வீர ரத்தம் ஓடும்
உனது உடம்பை
உசுப்பி,
குலுக்கி,
ஏறி,
இறங்கி,
நீ வர வேண்டும்.

O

எனது ஊர்
ஒரு
சிறு கிராமம்!
அது
அகதிகள் முகாமையும் -
வேறு முகாம்களையும் -
உள்ளடக்கி (ய)
''சிவந்த''
கிராமம்.
நீ
எந்த
இரவாக இருந்தாலும்
அலாதியாக
தூங்க முடியாது.

O

மனத்தை
உறுதியாக்கிக் கொண்டு
கசிந்த உணர்வுகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிந்துள்ள மனங்களை
நீ
பார்க்க வேண்டுமென்று
ஆசைப் பட்டால்
தைரியமாக வரலாம்...
எனது ஊரின்
கதவுகள்
இரவு பகலாக
திறந்தே இருக்கும் !
ஏனெனில்,
அவைகளும் -
காணாமலே
போயுள்ளன.

O

எனது ஊருக்கு
வரவேண்டும் !
கவனமாகவே
போக வேண்டும்.

*'கவிதாசாகரம்'*
*- தினகரன் வாரமஞ்சரி -*
**13 - 12 - 1992**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனக்கு ஒரு கல் வேண்டும்

எனக்கு
ஒரு கல் வேண்டும்.
இந்த யூதர்கள் மீது
எறிவதற்கு
எனக்கு
ஒரு கல் வேண்டும். !

O

அந்தக் கல்
கூரானதாக
இருத்தல் வேண்டும்.
எனது சமூகத்தின் பேரால்
நான்
அவர்களை நோக்கி
வீச வேண்டும்.
ஒரு யூதனையாவது
அந்தக் கூரிய கல்
குத்தவேண்டும் !

O

அந்த
யூதனின் மரணம்
எனது கூரிய கல்லால்...
ஏற்படல் வேண்டும். !

O

எனக்கு
ஒரு கல் வேண்டும்
இந்த யூதர்கள் மீது
நான் வீசுவதற்கு.

20 - 12 - 1992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தளம்
## உன்னை வரவேற்றது

வடக்கு நிலத்தை
ஏன் நீ
வெறுத்து வந்தாய்?
நண்ப,
உன் விலா எலும்புகளில்
பூசப்பட்டிருக்கின்ற
உறவு நிறம்
உயிரில்
கலந்த பின்பு
ஏன்
வெறுத்து வந்தாய்?

O

''இரண்டு
மணி நேரத்துக்குள்
யாழ் நகரை விட்டு
வெளியேற வேண்டும்''
என்ற உத்தரவு
உன் துணைவி
புஷ்பாவுக்குமா?
நிலத்துக்கு போராடும்
நவீன யுகத்தில்
நீ
நிலத்தை விட்டு
ஏன் பிரிந்து வந்தாய்?
செத்து மடிதல்
உனக்கு புதிதோ?

O

கொடிமரத்தின்
வேர்களில்
ஒட்டியிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்களைவிடவும்
பலமாக
இணைந்த
உங்கள்
சமூக அமைப்பை
பிரித்தது யார்?

O

விக்கிரக வணக்கங்களை
வெறுக்காமல்
மதம் புனிதமானது
என்ற உன் மனத்துக்கு
தீ வைத்தது யார் ?

O

ஒரு
இந்துப் பெண்ணின்
மன ஓலையில்
உன பெயர்
எழுதப்பட்டபின்பும்...
உனக்கு
ஒரு அடி நிலம்
இல்லாமல் போனதே !

O

சுபாஷ் ஹொட்டேலில்
அருந்திய
காபியின் சுவையை
சுப்ரமணிய பூங்காவில்
நாமிருவரும்
பிரித்துப் பார்த்து மகிழ்ந்தோம் !
அப்போதெல்லாம்
எமக்கு
பூக்கள்
நெருப்பை அள்ளி (க்)
கொட்டவில்லை ..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளி முட்களால்
பாய் விரிக்கவில்லை...
மாறாக,
மனத்தையே அள்ளி வீசியது!

O

சைவ உணவை
நேசித்த நீ
ஏன் உன்
நிலத்தை விட்டு
பிரிந்து வந்தாய்?
முருகன் கோயில் வாசலில்
சந்தித்துப் பேசும்
உன் நண்பர்களை
விட்டுப் பிரிந்து
எப்படி நீ வாழ்கிறாய்?

O

''உச்சிமீது வான் இடிந்து
வீழ்ந்த போதினும்
அச்சமில்லை அச்சமில்லை''
என்று பாரதி பாடியது
உனக்கு மனப்பாடம் இல்லையோ?

O

பாற்பண்ணைக்கு
பக்கத்தில் வெடித்த
குண்டுக்காக
கொளுத்தப்பட்ட
உடைமைகளை நினைத்து
வருந்திய
உன் மனத்துக்கு
என்ன நடந்தது?
உடுத்த ஆடையோடு
ஓடி வந்தாய்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால்
புத்தளம்தான்
உன்னை வரவேற்றது-

O

உப்பு படிந்த நிலம்
உன்னை வரவேற்றது...
உன் உடம்பில்
ஓடுகின்ற ரத்தம்
உப்பு நிலத்தில்
ஊறி இருப்பதை
நீ
அறிந்ததில்லை...
அப்படித்தான்
சுக போக அனுபவங்கள்
தலைக்கு மேல் ஏறி
மூச்சுத் திணறும் போது
அப்படித்தான்
இனத்தை யாரும்
அறிவதில்லை-
ஆனால்
உப்பு படர்ந்த நிலம்
உன்னை
வருக, வருக, என்று
வரவேற்றது.

O

அந்த நிலத்தில்
நீ.
முதல்
காலடி வைத்ததும்
தமிழனுக்கு
நன்றி சொல்ல வேண்டும்,
உன்னை
உயிரோடு அனுப்பியதற்காக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்ப,
கொடிமரத்தின்
வேர்களில்
ஒட்டியிருக்கும்
மண்களைவிடவும்
பலமாக
இணைந்த
உங்கள்
சமூக அமைப்பை
பிரித்தது யார்?

– அக்கரைப்பற்றுக் கவியரங்கு –


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல் தீபத்தில் ஒரு பெரு நாள்

பெரு நாள்
தினத்துக்காக
நீ வாங்கிய
புது ஆடையில்
எனது கைகள்
பட்டிருந்தால்
தயவு செய்து
கழுவி வைத்துக்கொள்!

O

யாருக்குப் பெருநாள்?
என்ற கேள்வியை.
மீண்டும்
ஒரு முறை
உன் இதயத்திடம்
கேட்டுப் பார்?
இதயம் இருந்தால்
பெரு நாள்
உனக்கு அல்ல,
என்று விடைகிடைக்கும்.

O

உலக மெல்லாம்
முஸ்லிம்கள்
நோன்புப்பெருநாளை
சந்தோஷமாக (க்)
கொண்டாடுவார்கள்
என்னைத் தவிர?
ஆனால்,
நானும் ஒரு முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாடுவேன்
நான் சொல்கின்ற
பெயரை
உனது குழந்தைக்கு
வைத்த பின்னர்!

O

ஒரு அடி நீளத்துள்
உன் முகத்தை வைத்து
ஜன்னலைப் பிடித்து
என்னைப் பார்த்த நீ
ஒரு அங்குல
நீளத்துள்
நின்று கொண்டு
உனது விழிகளைக் கூட
எனக்குக் காட்டாமல்
நிற்பது ஏன். ?

O

உண்மைதான்
ஈரமான
உனது காதலின்
தீயம்
உன் மனதை
சுடும் போது
எப்படி நீ இருக்க முடியும்?

O

உனது பெயரின்
எழுத்துக்களை
கணித வாய்ப்பாட்டு
முறைப்படி
மாற்றி, மாற்றி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்த பின்னர்
புரியும்
எவ்வளவு விளம்பரம்
உனக்காக (ச்)
செய்துள்ளேனென்று.

O

வயல் வெளிக்கும்
நீலக்கடலுக்கும்
இடையில் இருந்து
காதலித்த
எமது காதலின்
தீபத்தின் வெளிச் சத்தில்
அனைத்து
முஸ்லீம்களும்
பெருநாளைக்கொண்டாடட்டும்
ஆனால்
நான் மட்டும். ?

'கவிதா சாகரம்'
- தினகரன் வாரமஞ்சரி -
21 - 04 - 1991



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒருவன் இறைவன்

என்
மன வெளியில்
வெள்ளம் வந்து போனதாய்
ஒரு உணர்வு
உருவானது...
போட்டு வைத்த கோலம்
அடையாளம் இல்லாமல்
அழிந்துபோன பின் !

O

சேமித்துவைத்த
கொடூர நினைவுகள்
இரவின் காலடியில்
தவமிருந்தும்
இருண்ட வெளியில்
அழுதது வானம்
இருந்தும்
நினைவுகள் மட்டும்
நித்திரைகொள்ளவில்லை.

O

மேற்கு கரையின்
மலையில்
சறுக்கி விழுந்த
சூரியன்
திரும்பி வரவில்லை ..
சாகா வரம் பெற்ற
சரித்திர நினைவுகள்
தீப்பிடித்து எரியும் வரை !

O

ஆனாலும்
தனிமையில்
இரவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னோடு
தவமிருந்ததைப் பார்த்த
இறைவன் ஒருவன்
கூடவே இருந்தான்.

O

ஜமுனா
நதிக்கரையில்
படியும் நுரைகள்
எங்கள் வாய்களில்
படியும் வரையும்
நாங்கள் ஓடினோம்...
இரவையும் –
தனிமையையும் –
நினைவுகளையும் –
இழந்து ஓடினோம் - !
படுத்து உறங்கிய சூரியன்
விழித்து எழும்பும் வரை
நாங்கள் ஓடினோம் ...!
இனவாதத்தீயின்
வெளிச்சம் மாத்திரம்
எனக்குத் தெரிந்தது.
அந்த தீயை மூட்டியவன்
யார் என்பதை
என்னோடு இருந்த
இறைவன் ஒருவன்
அறிவான்.

O

தனிமையில்
இருந்த நான்
சனத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெரிசலில்
வேதனைப்பட்டு
இறைவன் ஒருவனை
விரும்புகிறேன்.

O

நான்
ஓடிக்கொண்டே
இறைவன் ஒருவனை
விரும்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலிகள் ஜாக்கிரதை

வெள்ளை
தூய்மை என்பார்கள்
நீ வெள்ளை
ஆனால்
உன் இதயம்
தூய்மையில்லை !

O

நிறங்களுக்கு (ப்)
பெயர் சூட்டியவன்
நானாக இருந்தால்
உனக்கு
கறுப்பு என்றே
பெயர் வைத்திருப்பேன்.

O

பூக்கள்
பிறக்கும் போது
மரியாதையாகத்தான்
பிறக்கின்றன...
அவை மலர்ந்த பின்னர் தான்
மரியாதை கெட்டுப்போகிறது.
கற்பு ஒரு முறை
காதல் பல முறை
காதலுக்கும் –
கற்புக்கும்
வெகு தூரமில்லை.
ஆனால்,
கற்புத்தான்
வாழ்வில் ஒரு முறை !

O

உன்னை
அஃறிணைப் பொருள்
விற்பவளாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதுகிறேன்...
உயிர்களிடத்தில்
அன்பு இல்லை
என்பதனால்!

O

காதல்
ஒரு முறை...
அது வாழ்வு
முடியும் வரை.

'கவிதாசாகரம்'
- தினகரன் வாரமஞ்சரி -
24 - 03 - 1991



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச மரமும்
## எனது வேதமும்

நெருப்பை
அள்ளிக் கொட்டினான்
இறைவன்.
நடு மத்தியில் இருந்த
தங்க வட்டம்
அசையாது இருந்தும்
பூமி வியர்த்துக்கொண்டே
இருந்தது !

O

அந்த
அரச மரத்தின்
நிழலையும்...
காற்றையும்
நான் நேசிக்கிறேன்.

O

புத்தர்
ஞானம்பெற்ற
அரச மரத்தின்
அடியில்
நான்
எனது வேதத்தை
புரட்டினேன்...
படு கொலை செய்தல்
கூடாது என்ற வசனம்
என் மனத்தைத் தைத்தது !

O

20ம் நூற்றாண்டின்
பிற்பகுதியில்
பூசப்பட்டுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதரத்தத்தின்
நிறம்
என்ன அழகு !
இந்த அரச மரமும்
பல படுகொலைகளை
கண்டிருக்கு !
ஆனால்,
கண், வாய், மூக்கு......
மூளை, இதயம்,
இல்லாத
அரச மரத்தை
நான் நேசிக்கிறேன்.

O

என்னிடம்
செல்வம் வந்தது...
வீரம் வந்தது...
கல்வி வந்தது...
ஆனால்,
நான்
ஒரு
மனிதனாகவில்லை.

O

அதற்காகவே
நான்
மீண்டும் ஒரு முறை
எனது வேதத்தை
அரச மரத்தின்
அடியில் இருந்து
மனப் பாடம் செய்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவில் இரண்டு பேர்

இரவு முழுதும்
இரண்டு
கரும்பலகை முகங்கள்
என் முன் தோன்றி
என் தூக்கத்தை
கலைத்தன !

O

கறுப்புக் கைகளுடன்
அவர்கள்
ஆயுதமும்
கொண்டு வந்தார்கள் !
ஒருவர்
கதவை திறந்து விடு
என்றார்......
மற்றவர்
கோழி முட்டையை
தெரியுமா என்றார்...... ?
நான்
இல்லை என்றேன் !
இரும்புக் கால்களால்
உதைத்து
எழுந்திரு என்றார்கள்...
நான் எழுந்திருந்தேன்.
இனவாதத்தை தூண்டும்
கவிதைகளைத்தான்
நீ
இனி எழுத வேண்டும்
என்று
வற்புறுத்தினார்கள்.
நான்
முடியாதென்றேன்.
மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரும்புக் கால்களால்
உதைத்து
எழுதவேண்டும்
என்றார்கள்...
நான் முடியாதென்றேன்.

O

சுடர்விட்டு
எரிகின்ற
சுந்தரக் கவிஞனை
தெரியுமா என்றார்கள்... ...?
நான்
தெரியாதென்றேன்.....
திருமணமே இல்லாமல்
வேப்பமரத்தடியில்
தன்னை
கவிதைக்கு
அர்ப்பணம் செய்தவனை
தெரியுமா என்றார்கள்
நான் தெரியாதென்றேன்.

O

அவைகளைத்
தெரியாத நீ
ஏன்
இந்த உலகிற்கு
வந்தாய் என்று
இரும்புக் கால்களால்
உதைத்தார்கள்
நான் தெரியாதென்றேன்!

O

கையில் இருந்த
ஆயுதங்களில்
மெஹஸினை மாட்டி
சத்தங்களை எழுப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயம் காட்டி
ஆயுதங்களைத் தா
என்றார்கள்!
நான் இல்லை என்றேன்.
இரும்புக்கால்களால்
உதைத்தார்கள்...
நான் இல்லை என்றேன்!

O

அந்நிய இனத்துக்கு
எதிராக
கவிதைகளை
எழுதவேண்டும்
என்றார்கள்..
நான் முடியாதென்றேன்.
முடியாவிட்டால்
எங்கள் தேசத்துக்கு
நீ வரவேண்டும்
என்றார்கள்.
நான் முடியாதென்றேன்!
ஆயுதத்தால்
என் முதுகில்
குத்தினார்கள்...
அப்போது
நான் கேட்டேன்
நீங்கள் யார் என்று?
அப்போது
அவர்கள் சொன்னார்கள்
நாங்கள்தான்
இனவாத
''கறுப்புக் கவிஞர்கள்''
என்று!
சத்தமிட்டுக் கத்தினார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்
திடுக்கிட்டு எழுந்தேன்...
கோழி கூவியது...
காகம் கரைந்தது...
கிழக்கு வானம்
தங்கச் சிற்பியை
என் பக்கமாக நீட்டியது.
நான் எழுந்திருந்தேன்
என்னுள்
ஒரு விதமான
புது உணர்வு
இழையோடியது.

ஆசிரியர் பயிற்சிக் கருத்தரங்கில்
வாசித்த கவிதை
1992 மே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவர்கள் வருவார்கள்

திருப்தியான சூழல்
இன்னும் உருவாகவில்லை !
உன்னையும்
அவர்கள் விசாரிப்பார்கள் !!
அவர்கள்
என்ன சொன்னாலும்
நீ தலை அசைக்க வேண்டும்.
தலையசைக்காத வரை
இருட்டு அறையுள்
உனக்கு சித்திரவதை நடக்கும்.

O

நேற்றும் அப்படித்தான்
ஒரு வாகனம் வந்தது...
உயரமான மனிதர்கள்
இறங்கினார்கள்...
சூரியனைச் சுட்டு
பூமியிலே விழுத்தினார்கள் ..
இருள் பூசிய வானம்
அழத் தொடங்கியது...
வீதிகள்
நீரைப் போர்த்திக் கொண்டது.
அவர்கள்
என்ன நினைத்துக்கொண்டு
வந்தார்களோ...
அவைகளைச் செய்தார்கள்!
தேவையானவர்களை மட்டும்
வாகனம்
மூச்சுத்திணறும்வரை ஏற்றியது.
அவனது தாய்
உயரமான மனிதர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலில் தவழ்கிடந்து
கெஞ்சினால்...
வாகனம் மூச்சிவிட்டு
விரைந்து சென்றது!

O

ஊர் அறியாத,
சனம் அறியாத,
மனிதம் அறியாத,
அந்த வாகனம்
எங்கு சென்றது ..
யாரிடம் சென்றது...
என்பது அறியாமல்
தவிக்கும்
அவனது தாயின்
குரல்
ஒவ்வொரு இரவின்
நடுப்பகுதியிலும்
எங்களுக்கு கேட்கிறது.

O

திருப்தியான சூழல்
இன்னும் உருவாகவில்லை –
அதனால்
தேதியில்லை,
நேரமில்லை,
பொழுது இல்லை
எப்போதும்
எந்நேரமும்
அவர்கள் வரலாம்
வந்து
யாரையும் அழைக்கலாம்...
எதுவும் கேட்கலாம்...
யாரும் ஒன்றும் பேசமுடியாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றும் அப்படித்தான்
ஒரு வாகனம் வந்தது
உயரமான மனிதர்கள் இறங்கினார்கள்
இறங்கி
உனது பெயரையும்
அவர்கள் விசாரித்தார்கள்...
திடகாத்திரமானவர்களை
அவர்கள் விசாரிப்பார்கள்...
பிறிதொரு நேரம்
வாகனத்தில் வந்து
ஏற்றிச் செல்வார்கள்.

O

திருப்தியான சூழல்
இன்னும் உருவாகவில்லை
நாங்கள்
பூரண மனிதனாக இல்லை –
ஆகவே,
நீ வரத்தேவையில்லை –
ஊர் அறியாத,
சனம் அறியாத,
அவர்கள் எங்கள் சமூகத்தில்
திரியும் வரை –
நீ வரத்தேவையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவளுக்காக நான்

ஒரு
வெள்ளைத்தாளில்
ஒப்பம் போடச் சொன்னார்கள்
அந்தக் கருக்கலில்
நான் மீண்டும்
செதுக்கப்பட்டேன் !

O

எத்தனை யோதரம்
நான் செதுக்கப்பட்டேன்...
மாலை கருகி
மடியில் விழுந்தும்
நான் செதுக்கப்பட்டேன் !

O

வலிமை கொண்ட
என் மனம்
அசையாத கொள்கையை
அடிக்கடி
புதுப்பித்துக் கொள்ளும்போது
புதுப் புதுச்சட்டங்கள்
என் கழுத்தை
நெருக்கியது !

O

யாரும்
எப்படியும் -
வடிவங்களை
சேர்க்கலாம்...
அந்த வெள்ளைத்தாளின்
புனிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பத்துக்குபின்னர்
கெட்டுப்போனது!

O

நான்
ஒப்பமிட்டேன்!
அதற்கு
ஒரு சில நிமிடங்களுக்குமுன்
சொன்னேன்...
எனது கண்களையும்...
சிறு நீரகத்தையும் -
யாருக்காவது
கொடுத்து விடுங்கள் என்று.

O

எனக்கு பிறக்கும்
குழந்தையை
நீங்கள் ஜீவிக்கும்
இடம் தெரியாத
ஒரு இடத்தில்
வளரவிடுங்கள்!

O

ஆணாக இருந்தால்...
இரும்புக் கம்பிகளை
கூராக்கி
எடுக்கத் தெரியாதவனாக,
சமூக உணர்வு -
அறியாதவனாக -
வெள்ளைத்தாழ்களின்
சரித்திரங்கள்
கேள்விப் படாதவனாக -
அவன் வளரவேண்டும் -
எனது நிலை
அறியாதவனாக
அவன் வளரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு
நீங்கள்
இதுவரை செய்த
சித்திரவதைகள்
போதும்!

O

வளரும்
எனது குழந்தையின்
உயிருக்காக
எனக்கு
உயிர் பிச்சைதாருங்கள்!

O

நாளை
ஒரு சமூகம் உருவாகும்...
அப்போது
உங்களை எதிர்க்க
அந்த சமூகத்தில் இருந்து
ஒருவன் வருவான்...
அவன்
எனது மகனாகவே இருப்பான்!

O

அந்தக் கருக்களில்
நான் மீண்டும் செதுக்கப்பட்டேன்!
மாலை கருகி
மடியில் விழுந்தும்
நான் செதுக்கப்பட்டேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி நீ
## ஓடத் தேவையில்லை

மலைமேல்
உட்கார்ந்து
தலைசீவும்
மேகங்கள்
எமக்கு சாட்சி சொல்லும்!
அழகி...
அதனால்
என் நிழலாக
உன்னை நான்
மதிக்கிறேன்.

O

பக்கத்து கிராமத்தின்
தமிழ் கலாசார
போக்குகளை
மதிக்கும் நான்
ஏன்
அவ்விடத்துக்கு
வரக் கூடாது.

O

எனது கிராமத்தின்
எல்லைக்கு அப்பால்
வசிக்கும் நீ
இரவுகளில் பயந்து
ஒடுங்கி விடுகிறாய்...
அதனால்
உன்னருகில் வர
விரும்புகிறேன்.

O

இன்பத்தையும்.
துன்பத்தையும் –


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகவைக்கும்
என் மன அடுப்பு
காத்துக் கொண்டே
இருக்கிறது
உனக்காக!

O

வெறும்
சத்தங்களைக் கேட்டு
நீ
இந்தப் பக்கம்
ஓடிவரத் தேவையில்லை –
பக்கத்தில்
இராணுவமுகாம்
உள்ளது.
நீ
ஓடிவரத் தேவையில்லை –

O

சுடு மணலில்
உனது பாதங்கள்
பதியும் போது
கசியும் ரத்தம்
எனது
மன அடுப்பு வரை
கசிகிறது...
நீ
ஓடிவரத் தேவையில்லை.

O

ஒவ்வொரு
நிமிடமும்
தங்க நகைகளையும் –
பணத்தையும் –
எடுத்துக் கொண்டு
ஓடவேண்டுமென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக் கொண்டு
நீ
தூங்கத் தேவையில்லை -
நிம்மதியாகத் தூங்கு...
நான்
உனது வீட்டு
கதவுக்குப் பக்கத்தில்
காவல் இருக்கிறேன்...
நான் மட்டுமல்ல
எனக்குப் பக்கத்தில்
இராணுவ
முகாம் உள்ளது.
வெறும் சத்தங்களைக்கேட்டு
இனி நீ
ஓடத் தேவையில்லை.

'கவிதாசாகரம்'

- தினகரன் வாரமஞ்சரி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனாக்கள்

ஆழமான
உன் மனத்தின்
அடியிலும்
நான் இருப்பேன்!
அங்கும்
ஆயுதகலாசாரத்தின்!
போக்குகளை
விமர்சிப்பேன்.

O

தீயின் மீது
விழுந்து
தீயாகும்
எனது
எண்ண ஜாலக்களுக்கு
ஒரு முறை
கால் முளைக்கும்.!
அதன் பின்னர்
அது
கடல் கடந்து செல்லும்-

O

இரவின் மடியில்
தோன்றும்
கனாக்களின்
கால்கள்
முடமாகியும் -
ஆழமான
உன்
மன மடி மீது
நகர்கிறது!
ஒரு காலாக-
ஒரு கையாக-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கண்ணாக
மாறிப் போகும்
எனது
சமூக அமைப்பில்
நீ மட்டும்
இரண்டு கால்களுடன் -
இரண்டு கைகளுடன் -
இரண்டு கண்களுடன் –
வாழ்வது புதுமையே!

O

பல தசாப்தங்களை
கடந்து வந்த
நாங்கள்
உன் மன மண்டபத்துள்
ஒரு நாள்
ஆயுத கலாசாரத்தின்
போக்குகளை
விமர்சிக்கலாம்.

O

கனவின் நுனியில்
ஒட்டிக் கொண்டு வரும்
நீயும் . ...
ஆயுதம் தாங்கி
வருவது ஏன்..... ?
காதலனோடு
உனக்கு என்ன சந்தேகம்...?

*(இலங்கை வானொலி 'கலைப் பூங்கா'வில் யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவரால் விமர்சனம் செய்யப் பட்டது)*

*'கவிதா சாகரம்'*
*- தினகரன் வாரமஞ்சரி -*
12 - 07 - 1992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உனது ஊரில்
## நீ நலமா.?

உனது ஊரில்
பனை மரங்கள்
பூப் பதில்லை -
காய்ப்பதில்லை -
என்று
கறுப்பு மைப்பேனா
அழுதழுதே
எழுதியிருந்தது.
ஏன்...?

O

அடிக்கடி
ஆசைப்படுகிறது
என் மனம்...
உனது வீட்டுக்கு
முன் நின்று
அடுத்த நாட்டை
பார்ப்பதற்கு.

O

கீரிமலையின்
கரை ஓரங்களிலே
நானும்.
நீயும்,
பதித்த -
பாதத்தின் தடங்கள்
இன்னும் இருக்குமா...?
அல்லது
இறந்திருக்குமா...?

O

புதிதாகக் கட்டிய
உனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புது வீடு
பூசாமலே
நாசமாகி விட்டதாக
எழுதியிருந்தாய்...
உனக்கு
லாபம் தான்
பூசுவதற்காக
வைத்திருந்த பணம்
உனக்கு லாபம்தானே!

O

உனக்கு
ஒரு
நிலம் வேண்டும்
என்பாயே...
ஏன் இப்போது
அந்த நிலத்தை
விற்கப்போகிறாய்?

O

கிரி மலையின்
கரை ஓரங்களிலே
நீயும்
நானும் -
பதித்த
பாதத்தின் தடங்கள்
இன்னும் இருக்குமா...
அல்லது
இறந்திருக்குமா,?

'கவிதாசாகரம்'
- தினகரன் வாரமஞ்சரி -
09 - 08 - 1992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01 - 09 - 1992

ஆலமரம்
இருந்த
இடத்திலிருந்து
அழுதது என் மனம்!

O

ரத்தத்தால்
அன்று
சந்தை
குளித்துக் கொண்ட போது...
காவல் துறையினர்
உறுமிக் கொண்டே
அங்குமிங்கும்
ஓடினார்கள்...
ஓடிய பின்னர்
மரணித்தவர்களின்
தொகை
இருபத்தி இரண்டாக
உயர்ந்தது!

O

எனது ஊரின்
அந்த
நீண்ட வீதியால்
பன்னீர் வாசத்துடன்
மரண ஊர்வலம்
மக்களின்
கண்ணீரைச் சுமந்தபடி
சென்றது.

O

சூரியன்
மேற்கே செல்ல ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு
கறுத்த விமானம்
வந்தது.
அந்தக் கறுத்த
விமானத்தில்
கசங்காத
ஆடைகளை அணிந்தபடி
சிலர் வந்தார்கள்.........
அந்தச் சந்தையின்
மேனி
சிதைவுண்டு
கிடப்பதை(க்) கண்டு......
கண் கலங்கினார்கள்!

O

சுற்றி
வளைத்து
நன்றாகப் பார்த்தார்கள்...
குறுக்கே கிடந்த
கால்,
கை,
தலை,
சதைத் துண்டுகளில்
தடக்குண்டு விழாமல்
தப்பிக் கொண்டு
ஆலமரத் தடிக்குவந்தார்கள்!

O

மீண்டும்,
அந்த
கறுத்த விமானம்
உயரப் பறந்தது...
சந்தையின் நடுவே
காவல் துறையினரை
கால் கடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கும் படி
சொல்லி விட்டு.

O

சனம்
அழுத கண்ணீரில்
சந்தை மிதக்க.
நான்
ஆலமரம் இருந்த
இடத்தில் இருந்து
அழுதேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி


தினகரன் வாரமஞ்சரி

முனைப்பு

எம். அப்துல் மஜீட் (S. S. P.)

வி. ஜெகதீஸன்

மேமன் கவி

ருத்ரா

யூ. எல். ஆதம்பாவா

யூ எல். இஸ்மாயில்

எம். ஏ. இப்றாஹிம்

மருதூர் பணிமனை

நெஷனல் -

அச்சக ஊழியர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடுத்தவனின் படைப்புகளுக்கு தீ வைத்து தான் அதில் குளிர்காயும் தன்மையில்லாதவர் ஹஸன் ஹஸனின் கவிதைகளில் இனம்புரியாத ஏதோவொன்றிருப்பதாக எனக்கு விமர்சன மடல்கள் வரும் இது வரை அதைத்தேடி இளைத்தவர் பட்டியலில் நானும் இருக்கிறேன்! துப்பாக்கி வாய்பட்ட தன் சின்னப் பிரதேசத்தின் சம்பவங்களை தன் காதலியுடன் பகிரும் அவர், எனக்கு ஒரு வித்தியாசமான கவிஞராகத் தெரிகிறார். அவர் ஆற்றல் வீற்றிருக்க வாழ்த்துக்கள்

அன்புடன்,
வீ. ஜெகதீஸன்,
லேக்ஹவுஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org